**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **செல்வி V. பார்கவி., B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2052, பிலவ வருடம் மார்கழி மாதம் 20-ம்நாள்

------

**அசல் வழக்கு எண். 201/2019 -ல் இடைமனு எண். 01/2021**

1. மணிமேகலை
2. ரவிச்சந்திரன்
3. நடராஜன் ( இறந்தார்)
4. மணிவண்ணன்
5. செல்வகுமார் ...1 முதல் 5 மனுதாரர்கள்/வாதிகள்
6. லதா
7. மணிகண்டன்
8. தினேஷ்குமார் .. 6 முதல் 8 மனுதாரர்கள்/ இறந்த 3-ம்வாதியின் வாரிசுதாரர்கள்

...எதிர்...

1. கார்த்திகேயன்
2. கோபாலகிருஷ்ணன்
3. ராஜதுரை
4. சின்னதுரை
5. நளமகாராஜன் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 15.12.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். சேயோன் அவர்களும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். முத்துக்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என் பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கில் 3-ம் வாதி 05.11.2020 அன்று இறந்துவிட்டதைப் பொறுத்து உரிய காலத்தில் வாரிசுகள் சேர்க்காமல் அறவுசெய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 22, விதி 9-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கானது 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3-ம் வாதி 05.11.2020 அன்று இறந்துவிட்டார். இறந்த 3-ம் வாதிக்கு உரிய காலத்தில் வாரிசுகள் சேர்த்து இந்த வழக்கை நடத்த வேண்டியது அவசியமானது. எனவே 3-ம் வாதி இறந்துவிட்டதைப்பொறுத்து உரிய காலத்தில் வாரிசுகள் சேர்க்க மனுத்தாக்கல் செய்யாமல் காலதாமதம் ஏற்பட்ட 60 நாட்களை மன்னித்து இறந்த 3-ம் வாதியின் வாரிசுகளை சேர்க்க வேண்டியது அவசியமானது. அதன்பொருட்டு மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **<u>1-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2,3,4,5-ம் எதிர்மனுதாரர்களால் தங்களுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். 3-ம் வாதி இறந்த விவரம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு நன்கு தெரியும். அவ்வாறு 3-ம் வாதி இறந்தவிவரம் மனுதாரர்களுக்கு தெரிந்திருந்தும் அவரது வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் 60 நாட்கள் கழித்து அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்வதற்கு சரியான காரணம் மனுவில் கூறவில்லை. இந்த மனுவினை மனுதாரர்கள் 23.02.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் 26.02.2021 அன்று திருப்பப்பட்ட மனுவை கிட்டதட்ட 4 மாதங்கள் கழித்து 19.07.2021 அன்றுதான் திரும்ப தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கினை காலங்கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாராகள் தரப்பில் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் என்றும், அசல் வழக்கானது 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1-ம் வாதி 05.11.2020 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு 6 முதல் 8 மனுதாரர்கள் வாரிசுகள் என்றும், இறந்த 3-ம் வாதியின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்த வேண்டியது அவசியமானது என்றும், எனவே இறந்த 3-ம் வாதியின் வாரிசுகளை உரிய காலத்தில் தரப்பினர்களாக சேர்க்காததால் அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்யக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 3-ம் வாதி இறந்த விவரம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், அவ்வாறு 3-ம் வாதி இறந்தவிவரம் மனுதாரர்களுக்கு தெரிந்திருந்தும் அவரது வாரிசுகளை உரிய காலத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் 60 நாட்கள் கழித்து அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்வதற்கு சரியான காரணம் மனுவில் கூறவில்லை என்றும், இந்த வழக்கின் நடவடிக்கைகளை காலங்கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக்கோப்புகள் பரிசிலிக்கப்பட்டன. மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் 3-ம் வாதி இறந்துவிட்டதைப் பொறுத்து உரிய காலத்தில் வாரிசு சேர்க்க மனுத்தாக்கல் செய்யாததால் அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் தாவா வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் 3-ம்வாதி 05.11.2020 அன்று இறந்துவிட்டதாக வாதிகள் தரப்பில் 09.12.2020 அன்று இந்நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இறந்த 3-ம் வாதியின் வாரிசுகளை சோப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக பல வாய்தாக்கள் வழங்கப்பட்டு 19.07.2021 அன்று மனுதாரர்கள்/வாதிகள் இந்த மனுவினை இறந்த 3-ம் வாதியின் வாரிசுகளை சேர்ப்பதற்கு உரிய காலத்தில் மனுத்தாக்கல் செய்யாமல் அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

9. மனுதாரா்கள்/வாதிகள் தரப்பில் இறந்த 3-ம் வாதியின் வாரிசுகளை உரிய காலத்தில் சேர்ப்பதற்கு உரிய காலத்திற்குள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கான காரணம் எதுவும் மனுவின் ஏற்புரையில் கூறவில்லை. மனுதாரா்கள் தங்களது மனுவின் ஏற்புரையில் 3-ம் வாதி இறந்துவிட்டதைப்பொறுத்து உரிய காலத்தில் வாரிசு சேர்க்காமல் காலதாமதம் செய்ததற்கான சரியான விளக்கத்தை கூறாததே மனுதாரா்கள் வேண்டுமென்றே வழக்கை காலம் கடத்தியுள்ளாா் என்பதை காட்டுவதாக உள்ளது. மனுதாரா்கள் உரிய காலத்தில் வாரிசு சேர்க்காமல் காலதாமதம் செய்ததற்கான சரியான விளக்கத்தை மனுதாரா்கள் நீதிமன்றத்தில் முன்சமா்ப்பிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. இருப்பினும் ' இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினா்களுக்கு வழக்கை நடத்த போதிய வாய்ப்பு வழங்குவது அவசியமானது என்று கருதியும் மற்றும் அவ்வாறு மனுவினை அனுமதிப்பதால் வழக்கின் மீது ஏற்படும் பல்வேறு மேல் நடவடிக்கைகளையும் (Multiplicity of proceedings) காலதாமதத்தையும் குறைக்கும் என்று கருதியும் மனுதாரா்களுக்கு ஒரு இறுதி வாய்ப்பு அளிக்கும் விதமாகவும், அசல் வழக்கில் இறந்த 1-ம் வாதிக்கு உரிய காலத்தில் வாரிசு சேர்க்காததால் அறவு செய்யப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் அவ்வாறு இம்மனுவை அனுமதிப்பதால் எதிா்மனுதாரா்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் வகையில் செலவுத்தொகை அளித்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீா்வு காணப்படுகிறது.

11. முடிவில், மனுதாரா்கள் எதிா்மனுதாரா்களுக்கு இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.1,000/-யை வருகிற 21.01.2022-ம் தேதிக்குள் கொடுக்கும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க - 22.01.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபாா்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022-ம் ஆண்டு ஜனவரி மாதம் 04-ம்நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீா்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாராகள் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை- |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை- |

மா.உ.நீ.

நேரிய / வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 201/2019-ல்
இடைமனு எண். 01/2021
நாள் - 04.01.2022